11 FEB 1972

மேலும் இரு கப்பல்களை இலங்கை வாங்கியது!

Registered as a News Paper in Ceylon [illegible] 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 1

யாழ்ப்பாணம் தை 28 துல்ஹஜ் 25 வெள்ளிக்கிழமை (11-2-72)

கொழும்பு, வியாழன்

இலங்கை மேலும் இரு கப்பல்களை வாங்கியுள்ளது ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து வாங்கப்பட்ட இந்த இரு கப்பல்களும் மார்ச் ஏப்ரல் மாதங்களில் வந்துசேரும் என்று உல்லாச பிரயாண கப்பல் துறை அமைச்சர் திரு பி. பி ஜி கலுகல்லே இன்று தெரிவித்தார். பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் 'லங்காராணி' என்ற கப்பலை இலங்கையின் முதலாவது சொந்தக்கப்பலாக வாங்கியது. சிங்கப்பூரிலிருந்து வாங்கப்பட்ட இந்த கப்பல் மூலம் கடந்த வருடம் 9 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்ததாக அமைச்சர் கலுகல்லே கூறினார்.

'லங்கா சாஹரிகா'

ஜப்பானில் 'லூஹியோ மாறு' என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட கப்பலை இலங்கை 2 லட்சத்து 14 ஆயிரம் அமெரிக்க டாலருக்கு வாங்கியுள்ளது. 3 வருட தவணையில் இந்தத் தொகை கொடுக்கப்படும் என்றும் கப்பல்துறை அமைச்சர் சொன்னார்.

இந்தக் கப்பலுக்கு 'லங்கா சாஹரிகா' என்று பெயரிடப்பட்டுள்ளது அடுத்தமாத இறுதியில் 'லங்கா சாஹரிகா' இலங்கை வந்துசேரும் கப்பலின் காப்டனும், சிரேஷ்ட என்ஜினியரும் மட்டும் ஜப்பானைச் சேர்ந்தவர்களாக

(5ம் பக்கம் பார்க்க)

நெல் கொள்வனவுத் திட்டம் பெப். 15-ம் திகதி ஆரம்பம்

நெல்லுக்குரிய பணத்தை விவசாயிகள் உடன் பெறுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

நெல் கொள்வனவு கடந்த மாதம் 25ம் தேதி முதல் அரசாங்கத்தால் மட்டும் நடாத்தப்பட்டு வருகிறது. இதற்கான சகல பொறுப்புகளையும், காணிவிவசாய அமைச்சர் நெல் சந்தைப்படுத்தும் சபைகளுக்கு கையளித்துள்ளார். அத்துடன் நெல் சந்தைப்படுத்தும் சபைகளுக்கு நெல் குத்துவதற்கும், அரிசி விற்பனை செய்வதற்கும் தனி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்கு கூட்டுறவு சங்க நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கும், பொது முகாமையாளர்களுக்கும், கிளை முகாமையாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது! நெல் சந்தைப்படுத்தும் சபை, சங்கங்களையும், கிளைகளையும் தங்கள் சார்பில் இப்பொறுப்புகளை ஏற்று நடாத்த அதிகாரங்கள் கொடுக்கும் சங்கங்கள் நிபந்தனைகளுக்கு இணங்க செயலாற்ற வேண்டும்.

தற்பொழுது பல கிராமிய நெற்களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளது இவைகளில் சில பூர்த்தியாகி விட்டன. சில இப்பொழுதும் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் இம்மாதம் 15 தேதிக்கு முன் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

இம்மாதம் 15ம் தேதி முதல் எல்லாச் சங்கங்களும், கிளைகளும் நெல் கொள்வனவை ஆரம்பிக்க வேண்டும். களஞ்சிய வசதியில்லாத சங்கங்கள் எனது முன் அனுமதியுடன் கட்டிடங்களைத் தற்காலிகமாக வாடகைக்கு எடுக்கலாம், விவசாயிகள் 3 மைல்களுக்கு அப்பால் பிரயாணம் செய்து கொள்வனவு செய்யாத வகையில், நெற்கொள்வனவு செய்வதற்கேற்ற ஒழுங்குகளை சங்கங்களும் கிளைகளும் எடுத்தல் அவசியம்.

தரகர்மார் மூலம் சங்கங்கள் நெல் கொள்வனவு செய்யலாகாது. விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் கட்டுப்பாட்டு விலையின் முழுப் பணத்தையும் அடையக்கூடியதாகக் கொள்வனவு செய்யப்படல்வேண்டும்.

நெல் கொள்வனவு செய்ய ஆரம்பிப்பதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் சங்கங்கள் தங்கள் வியாபாரக் கடன்களைப் பெறுவதற்கு மக்கள் வங்கிக்கு மனுச்செய்தல் வேண்டும். அத்துடன் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து வாங்கும் நெல்லுக்கு உரிய பணத்தை உடனுக்குடன் கொடுத்தல்வேண்டும் எல்லாச் சங்கங்களும் நாளாந்த நெல் கொள்வனவிற்குத் தேவையான பணத்தை ஒவ்வொரு கிளை முகாமையாளருக்கும் கொடுத்தல் அவசியம்.

50 புசல் நெல் கொள்வனவுக்கு விற்பவர் விரும்பினால் உரிய பணத்தை நேரில் கொடுக்கலாம். 50 புசலுக்கு மேற்பட்ட கொள்வனவுக்குக் காசோலை மூலமாகவே பணம் கொடுக்கப்படவேண்டும்.

தபால் அமைச்சருக்கு நாளை வடக்கில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

நியமன எம்பியும் தபால் அமைச்சருமான திரு செல்லையா குமாரசூரியருக்கு நாளை மாலை குருநகரில் வடபகுதி சுதந்திரக்கட்சிக் கிளைகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது

திரு எம் எஸ் பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தமிழ்காங்கிரஸ் எம் பிக்களும், நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியமும் கலந்து கொள்வார்கள்.

யாழ் மேயர் திரு அல்பிரட் துரையப்பா, காங்கேசன்துறை பட்டினசபை தலைவர் திரு கே ஜெயபாலசிங்கம், மல்லாகம் கிராமசபைத்தலைவர் திரு வி பொன்னம்பலம், பாரிஸ்டர் எம் சிவானந்தன், திரு ஏ விசுவநாதன், திரு பி கதிரவேலு. திரு எஸ் நடராசா உட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள்.

நாளை காலை 8-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

நாளை மாலை காங்கேசன்துறை பட்டணசபை மண்டபத்தில் பட்டணசபை தலைவரான அமைச்சர்களுக்கு விருந்துபசாரமளிக்கப்படும். [குரு நிரு

வியட்காங் நிலைகள்மீது கடும் விமானத்தாக்குதல்

நியூயோர்க், பெப். 10

தென் வியட்னாமில் கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால் அமெரிக்க விமானப்படைகளை நிக்ஸன் நிர்வாகம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது!

தென் வியட்னாமில் டாஞப் பகுதியில் சிலதினங்களாக கம்யூனிஸ்கள் பலத்த தாக்குதல்களை நடத்திவருகிறார்கள் டாஞப் பகுதியில் அமெரிக்கர்கள் நிலைகள் மீது வியட்காங்கியர் ராக்கட் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இப்பகுதியில் வியட்காங்கியரின் நிலைகள்மீது அமெரிக்க விமானங்களும் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாகவும் இதற்காக பெருமளவில் விமானப்படை அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

போதிய அரிசி கையிருப்பில் உண்டாம்

விற்பனைத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, வியா.

பொதுச் சந்தையில் போதியளவு அரிசி இருப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரிசி வர்த்தகத்தை விற்பனைத் திணைக்களம் பொறுப்பேற்றதை அடுத்து இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அரிசி வர்த்தகத்தைச் செய்யும் தனிப்பட்ட வர்த்தகர்களின் ஏகபோக உரிமையை முறியடிப்பதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தனிப்பட்ட வர்த்தகர்கள் கூப்பனுக்கில்லாமல் தனியாக விற்பதற்கு தங்களுக்குத் தேவையான அரிசியையும் உணவுப்பொருள்களையும் பெறுவதற்கு கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.

ஒருகொத்து குத்தரிசி ரூபா 1-10க்கே விற்கவேண்டும். ஆனால் சிலவர்த்தகர்கள் அதிக விலைக்கு விற்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்தே இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

ரங்பூர் மாவட்டத்தில்

60 ஆயிரம் பேர் கொலை

டாக்கா, பெப் 10

பங்களாதேஷ் விடுதலைப் போராட்ட காலத்தில் ரங்பூர் மாவட்டத்தில் மட்டும் 60 ஆயிரம் பேரை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொலைசெய்தனர் என்று பங்களாதேஷ் செய்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. ரங்பூர் நகரில் மட்டும் 10 ஆயிரம் பேர் கொலைசெய்யப்பட்டனராம்.

கியூபாவும் அங்கீகரித்தது

ஹவானா, பெப் 10

பங்களாதேஷை கியூபாவும் அங்கீகரித்துள்ளது. கடைசியாக அங்கீகரித்துள்ள கம்யூனிஸ்ட் நாடு இது.

புகையிரத சீட்டுகளுக்கும் உடனுக்குடன் வரி

பருத்தித்துறை, வியாழன்

1-10-71 தொடக்கம் நடைமுறையிலிருந்து வரும் உழைக்கும் பொழுதே வருமானவரி செலுத்தும் திட்டத்தின்படி சகல ஆசிரியர்களும் பாடசாலை ஊழியர்களும் வரி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர் என்று வடமாநிலக் கல்விப் பகுதிச் சுற்றுநிருபம் ஒன்று கூறுகிறது.

ஒவ்வொரு மாதமும் எடுக்கப்பட்ட புகையிரதச் சீட்டுகள், படுக்கை வசதி, குளிரூட்டு வசதி போன்ற முழு விபரங்களும் அதிபர் வாயிலாகத் திரட்டி அனுப்பப்படல் வேண்டுமென்றும் அவ்விதம் அறிக்கை சமர்ப்பிக்காத அதிபர்கள் உரிய தொகையுடன் மேலதிகமாக 5 வீத குற்றமும் கட்டநேரிடும் என அச்சுற்று நிருபம் கூறுகிறது.

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p m
Sat Sundays 10-30
HenryFonda-Lucille Ball
in
YOURS, MINE & OURS
(Color)
தினசரி 3.00, இரவு 9.45
ஜெமினி - சாவித்திரி
முத்துராமன் - மணிமாலா
நடித்த
பூஜைக்கு வந்த மலர்
[புதிய கொப்பி]

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-15, இரவு 9-30
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
தெய்வத்தின்
தெய்வம்

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும் வரை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி
நாளை 12-2-72 50-வது வெற்றித்திருநாள்
அன்றையதினம் 2-30, 6 30 மணிக் காட்சிகளாக
காண்பிக்கப்பட இருக்கின்றது
அதிர்ஷ்டசாலிகள் டிக்கட் அடிக் கட்டைகள் மூலம்
தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்றார்கள்.
முக்கிய குறிப்பு:
அன்றைய 2-30 6-30 காட்சிகளுக்கு
குடும்பத்துடன் வரும் ஆண்கள் மட்டுந்தான்
அனுமதிக்கப்படுவர்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
ஜெயலலிதா-அசோகன்
நடித்த
நீரும் நெருப்பும்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10 00
நாகேஸ்வரராவ்—
அஞ்சலிதேவி ரங்கராவ்
நடித்த
அனார்கலி

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெயலலிதா
தங்கவேலு - நாகேஷ்
நடித்த
சுமதி என் சுந்தரி

இன்று முதல்
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன்
★ சௌகார் ஜானகி
★ அசோகன் ★ லக்ஷ்மி
இன்னும்பலர் நடித்த
காவல் தெய்வம்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00, பி. ப. 2-00.
மாலை 6-00, இரவு 9-30
ஜெய்சங்கர் - சகுந்தலா
மனோகர் - ஆனந்தன் - தேவர்
தேங்காய் சீனிவாசன்
நடித்த
சி. ஐ. டி. சங்கர்

சாவகச்சேரி நகரசபை

கேள்விப்பத்திர விளம்பரம்

கீழ்க்காணப்படும் வேலைகள் செய்து தருவதற்கு இச்சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

வேலைகள்

1 நகரசபை அலுவலகக் கட்டிடத்தில் மேலதிக விஸ்தரிப்புவேலை செய்தல்

2. சந்தையில் வெங்காயக்கடைக்குத் தாரக் கொட்டகையும் சீமெந்துமேடையும் அமைத்தல்.

கேள்விப் பத்திரம் 17-2-72ந் திகதி பிற்பகல் 1-00 மணிவரை இந்நகரசபை அலுவலகத்தில் அதற்கான வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திர கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பகுதியில் இடதுபுறமாக வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு மெழுகு மோட்டு அடையாளம் வைத்து 1972ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ந் திகதி நண்பகல் 12-00மணிக்குமுன் இந்நகரசபை அலுவலகத்தில்வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடவேண்டும். அல்லது பதிவுத் தபாலில்அனுப்பப்படல் வேண்டும். இவைப் பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. கனகரத்தினம்.
தலைவர்
நகர சபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்
சாவகச்சேரி,
7 2-72 4022

சுங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் 2660 இருத்தல் பீடி இலைகள் 1972-ம் ஆண்டு மாசிமாதம் 15-ம் திகதி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். ஏல விற்பனை தினத்தன்று காலை 9-30 மணி தொடக்கம் பொருட்களை பார்வையிடலாம். ஏலத்தில் பொருட்களை வாங்கியவர்கள் உடனே 25 வீத பணத்தைக் கட்ட வேண்டும்.

ஏலவிற்பனை தொடங்கு முன் 1954-ம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்தெட்டாம் திகதி (பகுதி 1 தொகுதி 2) அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் பொருட்கள் வாங்குவோருக்கு வாசிக்கப்படும். தேசிய சிறுகைத்தொழில் கூட்டுத்தாபனத்தில் பீடி இலைகள் வாங்குவதற்கு கோட்டா பெற்றவர்கள்தான் ஏலவிற்பனையில் பங்குபற்றலாம்

எஸ்.எம்.ஜே.சேனரத்ன
யாழ் மாவட்ட
சுங்க சேகரிப்பாளருக்காக
4020

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
படகோட்டி

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி6-30, இரவு 10 00
சனி ஞாயிறு 2-30
துலாபாரம்
[தமிழ்]

வைத்தியம்

வாதம், இரத்த தொய்வு ஆகிய வியாதிகளை முற்றுக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D A M) தங்கபாஸ்கரன் வைத்தியசாலை. இராசா வீதி நவீன மார்க்கெட், யாழ்ப்பாணம்
3898

ஆலோசனை இலவசம். அரைச்செற் ரூபா 150/- திறமான பற்களைக் கட்டலாம். வலியில்லாமல் பல் கழட்டலாம். சிங்கப்பூர் பல்கட்டுமிடம், A S சக்கரப்பிள்ளை கட்டிடம், மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 4014

சங்கானைப் பட்டின சபையின் வரியிறுப்பாளர்களுக்கு பட்டினசபைத் தலைவரின் பணிவான வேண்டுகோள்

அன்புடையீர்,

இதுவரை காலமும் பட்டினசபைத் தலைவரிடமும், கௌரவ அங்கத்தவர்களிடமும் இருந்துவந்த சபையின் சோலை வரிகள், வாடகைகள், அனுமதிப் பத்திர அறவீடுகள் ஆகியவற்றை அறவிடும் பொறுப்புகள் சட்டரீதியாக 1972ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் பட்டினசபையின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வரி வசூலிப்போர் மூலம் சோலை வரி அறவிட்டு வந்த வழக்கமும் சட்டமூலம்1-1-1972ம் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே நீங்கள், உங்களது பெயரிலுள்ள ஆதனங்கள் மூலமாகச் சங்கானைப் பட்டினசபைக்குச் சேரவேண்டிய வரி நிலுவைகள் ஆகியவற்றையும், இனிமேல் காலத்திற்குக்காலம் கட்ட வேண்டிய சோலைவரிகளையும் நேரடியாகப் பட்டின சபை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்

ஆகையால் இதுவரை காலமும் தாங்கள், தலைவராகிய என்னுடனும், சபையின் கௌரவ அங்கத்தவர்களுடனும் ஒத்துழைத்து இச்சபையின் வளர்ச்சியிலும், நிர்வாகத்திலும் ஆக்கமும் ஊக்கமும் காட்டியதுபோல், இனி வரும் காலத்திலும் இச்சபையின் செயலாளருடன் ஒத்துழைத்து வருவீர்கள் என்ற நல் நோக்கத்துடன் இப்பணிவான வேண்டுகோளை விடுக்கின்றேன்.

வணக்கம்
தங்கள் உண்மையுள்ள
சி. வைரமுத்து
தலைவர்
பட்டினசபை, சங்கானை.
பட்டினசபை அலுவலகம்,
சங்கானை. 4021

நாகஸ் சினிமா
சுன்னாகம்
6-30, 9-30 மணிக்கு
ஜெமினி - சாவித்திரி
கொஞ்சும் சலங்கை
(புத்தம் புதிய கொப்பி)
KISS THE GIRLS AND MAKE THEM DIE
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். -தேவிகா
நடித்த
ஆனந்தஜோதி
வெள்ளி சனி4-15 மட்டும்
SWEET NIGHTS
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

தேவை

பெரிய விவசாயப்பண்ணையில் வேலைசெய்ய விரும்பும் 14, 18 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் தேவை. நல்ல சம்பளமும் சாப்பாடும் தங்குமிடமும் கொடுக்கப்படும் முன்னேற இடமுண்டு. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். அல்லது பெப்ரவரி 16-ம் திகதி புதன்கிழமை நேரில் வரவும் விலாசம் 181. B அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4016

விற்பனைக்கு

இயக்கச்சியில் பனை பாலையை முகப்பாகக் கொண்ட 45 ஏக்கர் தென்னையும் 5 ஏக்கர் வயலும் உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. விபரங்கட்கு நேரில் வரவும் செ. செல்லத்துரை. 68/5 இராசாவின் தோட்டம்வீதி. யாழ்ப்பாணம். 4015

கல்வி

ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., அரசாங்க ஊழியர்களுக்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனா நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3888

சோதிடம்

நிறம், வயது, பூமியின் பெயர் குறித்து 15 சத முத்திரையுடன் உறையனுப்பிப் பதில் பெறவும். உலக சேவை மனோரஞ்சித ஆரூடம் ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் ந. சண்முகராஜா, கொக்குவில்.
3900

வட்டுக்கோட்டை கிராமசபை வரியிறுப்பாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

இதுவரை காலமும் ஆதன வரி தரகு முறையையில் அறவிடப்பட்டுவந்தது. அது ஒழிக்கப்பட்டு 1-1-72-ந் திகதி தொடக்கம் அலுவலகத்தில் நேர்முகமாகச் செலுத்தும் முறைமை கையாளப்பட்டுள்ளது. ஆகவே வட்டுக்கோட்டை கிராமசபை வரியிறுப்பாளர்கள் யாவரும் 1959-ம் ஆண்டு தொடக்கம் 1971-ம் ஆண்டு முடிவுவரை செலுத்தவேண்டிய நிலுவைப்பணம் யாவற்றையும் 10 வீதம் குற்றப் பணத்துடன் 28-2-72-ந் திகதிக்கு முன்பு [illegible] கட்டி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அதோடு 1972-ம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்குமான வரிப்பணத்தையும் முறையே பங்குனி 31, ஆனி 30, புரட்டாதி 30, மார்கழி 31 ஆகிய திகதிகளுக்கு முன் கிராமசபை அலுவலகத்தில் செலுத்துமாறு வரியிறுப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

குறிப்பிட்ட தேதிகளில் ஆதனவரி கட்டத் தவறினால் மேலும் 10 வீதம் குற்றப்பணமாக அறவிடப்படும்.

1971-ம் ஆண்டின் முடிவுவரை செலுத்தவேண்டிய வரிப்பணம் நிலுவையாக இருப்பின் அதை உடனடியாகச் செலுத்தி, அசையுள்ள அசையாத சொத்துக்கள் கிராமசபையால் கைப்பற்றப்பட்டு விற்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தங்களது பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

ச. நிற்சிங்கம்
தலைவர்
கிராமசபை,
வட்டுக்கோட்டை.
கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
9-2-72. 4019

அதிபர் நிக்ஸனும் ஒப்புக்கொள்கிறார்

“தென் ஆசியாவில் இந்தியா பலம் பொருந்திய நாடு!”

நிபந்தனை மீதுதான் இனிமேல் யு. எஸ். உதவி

நியூயோர்க். பெப். 10

தென். ஆசியாவில் இந்தியா ஒரு பலம்வாய்ந்த நாடு என்று அமெரிக்க அதிபர் திரு. ரிச்சார்ட் நிக்ஸனும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அதிபர் நிக்ஸன் சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையில் இந்தக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

சமீபத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்ற போரின்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா சீனா போன்ற நாடுகள் பலத்த உதவிகள் வழங்கிய போதிலும் இந்தியா திறமையாகப் போரை நடத்தி பல முனைகளிலும் வெற்றிவாகை சூடியது இங்கு நினைவுகூரத்தக்கது. அமெரிக்கா தனது ஏழாவது கடற்படையை இந்து சமுத்திரத்துக்கு அனுப்பிய வேளையிலும்கூட இந்தியப்படைகள் அதனைப் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் போராடினார்கள். இந்துமாக்கடலில் இந்தியக் கடற்படை தன் வலுவை நிலைநாட்டிக்காட்டியது. இந்திய விமானப்படைகளும் தரைப்படைகளும் காட்டிய வெற்றியின் காரணமாகவே பங்களாதேஷ் உதயமாயிற்று.

இதையெல்லாம் கருத்தில் கொண்டே அதிபர் நிக்ஸன் தென்னாசியாவில் இந்தியா பலமிக்கநாடாக விளங்குகின்றது என கணித்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தியாவுக்கு பொருளாதார உதவி அளிப்பதுபற்றி குறிப்பிட்டுள்ள அவர் சில நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தியாவுக்கு பொருளாதார உதவி கொடுப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தியா தென்னாசியாவில் பலம் வாய்ந்தநாடு. மற்ற நாடுகளுடன் அது எப்படி நடந்துகொள்கிறது என்பதைப்பொறுத்தே அந்த உதவிகள் வழங்குவதுபற்றி ஆலோசிக்கப்படும் என்று அதிபர் கூறியுள்ளார்.

தேசிய சீனாவுக்கு தொடர்ந்து ஆதரவு

தேசிய சீனா என்றழைக்கப்படும் தாய்வானை அமெரிக்கா தொடர்ந்து ஆதரித்துவரும் என்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிறார். அந்த நாட்டுக்கு அமெரிக்கா அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலக அமைதிக்காகத் தாம் எடுத்துள்ள நடவடிக்கைகள்பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு உலக அமைதி விஷயத்தில் பெரிய அளவில் வெற்றி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் சீனாவுக்கு தாம் விஜயம் மேற்கொள்ளவிருப்பதுபற்றியும் சோவியத் யூனியனுடன் சில ஒப்பந்தங்களை செய்து கொள்ளப்பட்டிருப்பதுபற்றியும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்காசியாவில் சோவியத் கையாளும் கொள்கையை அவர் கண்டித்துள்ளார். எகிப்துக்கு பெரிய அளவில் சோவியத் உதவி புரிந்துள்ளதாகவும் அங்கு தன் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷ் அரசை யு.எஸ். அங்கீகரிக்கும்?

புதிய பங்களாதேஷ் அரசை அமெரிக்காவும் அங்கீகரிக்கும் என்று ராஜதந்திர வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றது.

பங்களாதேஷ் அங்கீகாரம் சம்பந்தமான விஷயம் அதிபர் நிக்ஸன் சீனாவுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியபின்னர் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று டாக்டர் கிஸிங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ள பல நாடுகள் ஏற்கனவே பங்களாதேஷ் அரசை அங்கீகரித்துவிட்டதாலும் பாகிஸ்தானுடன் எந்தவித உறவுகளும் இனி பங்களாதேஷ் வைத்துக் கொள்ளாது என்ற நிலை ஏற்பட்டிருப்பதாலும் அங்குள்ள இந்தியப் படைகளை விரைவில் திருப்பி அழைத்துக் கொள்ளப்படவிருப்பதாலும் அமெரிக்கா விரைவில் பங்களாதேஷ் அரசை அங்கீகரிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜப்பான் அங்கீகாரம்

பங்களாதேஷ் அரசாங்கத்தை ஜப்பான் அரசாங்கம் முறைப்படி அங்கீகரித்துள்ளது.

பங்களாதேஷுடன் முழு அளவில் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளப் போவதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

சில்லி நாடும் ஏற்கனவே பங்களாதேஷை அங்கீகரித்துள்ளது.

……

விஞ்ஞான உபகரணங்கள்

கொடிகாமம், விசே.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கு விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்பட்டிருப்பதோடு விஞ்ஞான ஆசிரியராக திரு. எம். நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாக். ஆதரவாளர்கள் கைது

டாக்கா, பெப் 0

பங்களாதேஷில் வன்முறையில் ஈடுபட்டு வந்த பாகிஸ்தான் ஆதரவாளர்கள் 800 பேர் சரணடைந்துள்ளனர்.

பங்களாதேஷில் மீர்பூர் என்ற இடத்தில் பாகிஸ்தான் ஆதரவாளர்கள் பலர் வசித்து வந்தனர். இவர்கள் ரகசியமாக பங்களாதேஷ் மக்கள்மீது தாக்குதல் நடத்தி வந்தார்கள். இத்தாக்குதலில் கடந்த சில நாட்களில் மட்டும் 350 பேர் வரை கொல்லப்பட்டனர்.

இந்தப் பாகிஸ்தான் ஆதரவாளர்களைப் பிடிக்க பங்களாதேஷ் இராணுவமும் பொலிசாரும் முயற்சி எடுத்து வந்தனர். இதன்பயனாக 800 பாகிஸ்தான் ஆதரவாளர்கள் சரணடைந்தனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

மேற்கு சமோவா அங்கீகாரம்

டாக்கா, பெப். 10

தெற்குப் பசுபிக் தீவான மேற்கு சமோவா பங்களாதேஷ் குடியரசை அங்கீகரித்துள்ளதாக டாக்காவில் தெரிவிக்கப்பட்டது.

கனடா இதுவரை பங்களாதேஷை முறைப்படி அங்கீகரிக்கவில்லையானாலும், பங்களாதேஷ் காமன்வெல்த்தில் சேர்வதற்கு தமக்கு ஆட்சேபனையில்லை என்று தெரிவித்துள்ளது.

கனடா பங்களாதேஷை வரும் வாரத்தில் அங்கீகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷிற்கு

சோவியத் யூனியன் விமானங்கள் வழங்கும்

டாக்கா, பெப். 17

பங்களாதேசத்திற்கு ரஷ்யா விமானங்களும் பொருளாதார உதவியும் வழங்க முன்வந்துள்ளது. பங்களாதேசத்தில் போக்குவரத்துக்காக இந்த ஆண்டு சிறிய விமானங்களை ரஷ்யா கொடுக்க முன்வந்துள்ளது.

அடுத்த ஆண்டு மிகப் பெரிய விமானங்களை பங்களா தேசத்திற்கு கொடுக்க ரஷ்யா முன்வந்துள்ளது.

12 பேரடங்கிய ரஷ்ய நிபுணர் குழு அடுத்தவாரம் டாக்காவிற்கு செல்லவிருக்கின்றது. அங்கு பங்களா தேச அதிகாரிகளுடன் உதவிகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

டாக்கா அருகில் உள்ள கொராசல் மின்நிலையத்தை புனர்செய்து கொடுக்கவும் ரஷ்யா முன்வந்துள்ளது ரஷ்யா உதவிபற்றி பங்களா தேசத்திலுள்ள ரஷ்ய தூதரும் பங்களாதேச மந்திரியும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

பங்களாதேசத்திற்கு விமானம், பஸ்கள் லொறிகள் கொடுக்க இங்கிலாந்தும் தீர்மானித்துள்ளது இந்தத் தகவல்களை பங்களாதேச மந்திரி அப்துல் சமது [illegible] தெரிவித்துள்ளார்.

நிக்ஸனின் சீனவிஜயம் வெற்றியளிக்குமா?

நியூயோர்க். பெப் 10

அதிபர் நிக்ஸன் சீனாவுக்கு விஜயம் செய்ய இன்னும் ஒரு சில வாரங்களே இருக்கின்றன.

இந்த விஜயம் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதுபோல் அவ்வளவு வெற்றிகரமாக இருக்குமென்று அவதானிகள் கருதவில்லை. சீனாவுக்கு விஜயம்செய்வதற்கு அதிபர் நிக்ஸன் முடிவு செய்ததின் பின்னர்கூட இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் எந்தவகையிலும் முன்னேறியிருப்பதாகத் தெரியவில்லை.

ஐ நாவில் கம்யூனிஸ்ட் சீனாவை சேர்த்துக் கொள்வதற்கு அமெரிக்கா முன்பு காட்டிவந்த எதிர்ப்பை கடந்தஆண்டு தளர்த்திக் கொண்டதென்றாலும் இரண்டுசீனா கொள்கையை அது விடாப்பிடியாக பற்றி நின்றது. போமோஸாவை வெளியேற்றியோ அந்த இடத்தில் கம்யூனிஸ்ட் சீனாவை அமர்த்தவோ அமெரிக்கா விரும்பவில்லை. மாறாக இரு சீனாவுக்கும் ஐ நாவில் இடம் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் சீனா உலக ஸ்தாபனத்தில் இடம்பெறுவதை அமெரிக்கா வேறு விதத்தில் தடுக்கவே முயற்சி எடுத்தது என்று அவதானிகள் கருதினார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் செஞ்சீனா ஐ நா.வில் இடம்பெற்றது. அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கைக்கு ஏற்பட்ட பலத்த வீழ்ச்சியென்று கருதப்பட்டது பின்னர் வியட்னாம் விவகாரத்திலும் சிக்கல் ஏற்பட்டது. சமீபத்தில் வட வியட்னாம் ராணுவ நிலைகள்மீது அமெரிக்க விமானங்கள் கடுமையான குண்டு வீச்சுக்களை நடத்தியிருப்பது சீனாவுக்கு மகிழ்ச்சியளிக்கும் செயலல்ல.

வியட்னாம் விவகாரத்தை சீனத்தலைவர்கள் நிக்ஸனுடன் நேரில் பேசுவதற்கும் தயாராயில்லை. இது வியட்னாம் மக்களின் விவகாரம் அவர்களுடனே பேசி அந்தப் பிரச்னைக்கு முடிவுகள் செய்யப்பட வேண்டும் என்று சீனத்தலைவர்கள் கூறிவிட்டதாகத் தெரிகின்றது.

எல்லாவற்றுக்கும்மேலாக தைவானுக்கு அமெரிக்கா கொடுத்துள்ள வாக்குறுதிகள் காப்பாற்றப்படும் என்று அதிபர் நிக்ஸன் இப்பொழுது அறிவித்திருப்பது செஞ்சீனாவின் ஆத்திரத்தைத்தான் ஏற்படுத்தியிருக்கும்.

தைவான் சீனாவிலிருந்து பிரிக்கமுடியாத ஒரு பகுதி, அதனை மீண்டும் சீனாவுடன் இணைத்தே தீருவோம் என்று கம்யூனிஸ்ட் சீனத்தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தைவானிலுள்ள அமெரிக்கப் படைகளை விலக்கிக் கொள்ளும்படியும் அமெரிக்காவை அவர்கள் கேட்டு வருகின்றனர்.

தைவானுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளைக் காப்பாற்றுவோம் என அறிவித்துவிட்டு நிக்ஸன் சீனாவுக்கு செல்வதால் அங்கு உண்மையான அன்போடு வரவேற்கப்படுவாரா என்பது சந்தேகமே.

டில்லியில் அண்ணா சிலை

கல்கத்தா, பெப். 10

டில்லி பாராளுமன்றம் முன் அறிஞர் அண்ணாவுக்கு சிலை அமைக்க வேண்டும் என்று கல்கத்தா தமிழ் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது

கல்கத்தாவில் அண்ணா நினைவுதினக் கூட்டத்தில் அண்ணாவுக்கு சிலை அமைக்க கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது!

யாழ் நகரில் ஏழு மீன்பிடி கூட்டுறவு சங்கங்கள் பதிவாகும்

மாவிட்டபுரம், வியாழன்

மீன்பிடித் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்நகரில் உள்ள ஏழு மீன்பிடிக் கூட்டுறவு ஆரம்பசங்கங்கள் மார்ச் மாதத்தில் பதிவுசெய்யப்பட இருக்கின்றன.

மீன்பிடித் துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் மீன்பிடி இலாகா கூட்டுறவு இலாகா என்பன இணைந்து வகுத்த புனரமைப்புத் திட்டங்களின்படி நாடுபூராவிலும் ஆரம்பிக்கப்பட்ட 46 ஆரம்ப சங்கங்கள் சென்ற டிசம்பர் மாதம் முதல் பதியப்பட்டு வருகின்றன.

இத்தவரிசையில் யாழ் நகரில் உள்ள ஏழு ஆரம்ப சங்கங்கள் மார்ச் மாதத்தில் பதியப்பட உள்ளது.

இதற்கிடையில் மேற்படி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இம்மாதம் 12-ம் திகதி நெடுந்தீவில் ஆரம்பித்து மற்றும் சில பகுதியிலும் புனரமைப்பு பற்றிய பிரசார கூட்டங்களை நடத்துவதெனவும் புதிய திட்டத்தை மார்ச் மாதத்தில் அமுல் நடத்துவதெனவும் யாழ் நகரில் அண்மையில் நடந்த மீன்பிடி அதிகாரிகள் மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

ஹிப்பிகளைத் தொல்லைப்படுத்தினால் சட்டபூர்வமான நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

'ஹிப்பி'களை அவமானப்படுத்தி தொல்லை கொடுப்போருக்கு எதிராக இனிமேல் பொலிஸார் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பார்கள்.

இங்கு வரும் 'ஹிப்பி'களில் சுமார் 90 வீதமானோர் இங்கு தங்கியிருக்கும் நாள் ஒன்றுக்கு ஐந்து டொலர்களை செலவிடவேண்டும் என்ற நிபந்தனைக்கு ஏற்ப தங்களுடன் வேண்டிய அந்நிய செலாவணியை வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை உல்லாசப் பிரயாணிகள் அமைச்சு கண்டுபிடித்துள்ளது.

இத்துடன் 'ஹிப்பிகள், தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு ஊசிகளையும் போட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

இவர்கள் பார்ப்பதற்கு பிச்சைக்காரர்களை போல் இருந்தாலும் அவர்களிடம் போதியளவு பணவசதி இருக்கிறது எனவும் அவர்கள் இங்கு உணவுக்காகவோ தங்குவதற்கு இடவசதிக்காகவோ மற்றவர்களின் தயவை நம்பி இருக்கவில்லையாம்.

ஆகவே 'ஹிப்பி'களும் இலங்கைக்கு அந்நிய செலாவணியை சம்பாதிப்பதற்கு உதவி செய்யும் உல்லாசப் பிரயாணிகள் என்பதை அமைச்சு இப்போது ஊர்ஜிதம் செய்து இருக்கிறது.

ஆகவே இனிமேல் 'ஹிப்பி'களுக்கு உணவு அளிப்பதற்கும் அறைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு தயங்கும் ஹோட்டல் முதலாளிமார்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குத்தொடருவார்கள். (நா)

……

கோஷ்டிச் சண்டையில் நால்வர் காயம்

மாவிட்டபுரம் வியா.

மயிலிட்டிக் கரையில் சில தினங்களுக்கு முன் நடந்த கோஷ்டி மோதலில் ஒரு பெண் உட்பட நால்வர் காயத்திற்குள்ளாகினர்.

மயிலிட்டிக்கரையை அடுத்துள்ள அம்பந்தலையைச் சேர்ந்த இரு பகுதியினருக்கிடையே பல காலமாக இருந்த காணிப்பிரச்னையாக இக்கோஷ்டிக் கலவரம் எழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முருகுப்பிள்ளை என்பவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இத்துடன் பழனி, நடராசா, நாகமுத்து என்ற பெண் ஆகியோரும் சிறு காயத்திற்குள்ளாகி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இதுபற்றிக் காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 11. 2. 72

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி- மங்களவாத்தியம் 6-20 சைவநற்சிந்தனை- சிவகுமார், 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 வார சம்பவம், 7-05 பண்ணோடு தமிழ்- முத்துலக்ஷ்மி குழந்தைவேல், 7-35 குரல்வகை 8-00 பயானுல் குர்-ஆன், 8-15 இஸ்லாமிய கீதம்

6-10 அறிவிப்புகள், 6-15 மறக்கமுடியாத பாடல்கள், 6-30 சிவராத்திரி புராணம், 7-00 பெண்ணுலகம்: தயாரிப்பு- ராஜேஸ்வரி சண்முகம்- 7-30 வெளிநாட்டுச் செய்திகள் 7-35 முக்தி நெறி: சிவராத்திரிபுராணம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 பேச்சு,

வரவேற்பு

வல்வியங்காடு, வியா,

இலங்கை உதைபந்தாட்டக் கழகத்தில் அங்கம் வகித்து கேரளா சென்றுள்ள உதைபந்தாட்ட வீரர்களாகிய திரு எஸ் பிரான்சிஸ், ஏ அன்ரனிப்பிள்ளை, ஏ சொலமன் ஆகிய மூவரும் திரும்பிவரும் போது சென்ற் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் வரவேற்பளிக்க விருக்கிறது.

கமக்காரர்களுக்கும் - கடல்தொழிலாளர்களுக்கும்

ஓர் நற்செய்தி!

எல்லாவகையான நீர்இறைக்கும் யந்திரங்களுக்கும்
அவுட்போட் மோட்டர்களுக்கும் உரிய
மக்னெற்றோ கொயில்கள்
(MAGNETO)
ஒரு வருட உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டுவீதி -- யாழ்ப்பாணம்.

இன்றைய பலன்

தை மாதம் 28-ந் திகதி
(11-2-72]

மேஷம்: திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும், சிரமமான காரியங்களையும் இலகுவாகச் செய்துமுடிப்பீர்கள்.

ரிஷபம்: இதயத்தில் இன்னைதுன்னும் பகைவர்கள் பணிவர், வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு.

மிதுனம்: வேலைகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், சிக்கலான பிரச்னைகளை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது

கடகம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பபிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும் இன்று பொன்னான நாள்.

சிம்மம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர்

கன்னி: இன்று முன்னணியில் நிற்பீர்கள் தலைதீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வநம்பிக்கையும் மேலோங்கும்.

துலாம்: கடமையில் அதிக ஆர்வம்பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்வதில் வெற்றிகாண்பீர்கள். தெய்வத்தின் துணையும் உண்டு.

விருச்சிகம்: எதிர்பாராத பொருள்வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம். நன்மையான காரியங்களில் பணச்செலவும் ஏற்படும்.

தனுசு: எதிலும் தடுமாற்ற நிலை ஏற்படும், குசுகுசுப் பேச்சுக்களின் மூலம் அவதூறுகள் பரப்பப்படலாம். உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

மகரம்: ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்கு சிலர் முனைவர் நிதானம் விரும்பத்தக்கது.

கும்பம்: பூமியால் அதிக இலாபம் கிடைப்பதற்கு இடமுண்டு விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும்.

மீனம்: இதயத்தில் எரிமலை குமுறும் உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

செங்கற் தொழிற் பேட்டை

ஒட்டுசுட்டான், வியா.

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள காதலியார் சம்மளங்குளம் என்னும் இடத்தில் அரசாங்கம் விரைவில் ஒரு செங்கற் தொழிற்சாலையை ஆரம்பிக்கவுள்ளது. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களையும் வேலையாட்களையும் இப்பகுதியில் உள்ள படித்த இளைஞர்களிடையே தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை நெடுங்கேணி காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்றது.

……

இன்னும் கிடைக்கவில்லை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பகுதியில் உள்ள ஓர் உபதபால் கந்தோர் மூலம் தனது புதிய தபால் கந்தோர் சேமிப்பு வங்கிப் புத்தகத்தைப் பெறுவதற்கு பழைய புத்தகம் அனுப்பி ஆறு மாதங்களுக்கு மேலாகியும் உரியவருக்கு புதிய புத்தகம் இதுவரை கிடைக்கவில்லையாம்.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர் தபால அமைச்சருக்கு புகார் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.



யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லைஞான சம்பந்தர் ஆதீனத்தில் இலவச யோகாசனப் பயிற்சி நடாத்திவரும் மட்டுநகர் ஸ்ரீ சிதானந்தயோகி இன்று மாலை 6 மணிக்கு வண்ணைவைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் சொற்பொழிவாற்றுவார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்குவார்.

யாழ்ப்பாணத்தில் தொல்பொருள் கண்காட்சி

மாவிட்டபுரம், வியா.

யாழ். மாவட்டத்தின் ஆதிகால வரலாற்றை எடுத்துக்காட்டும் தொல்பொருள்கள் கொண்டதான பிரமாண்டமான தொல்பொருள் கண்காட்சி ஒன்று ஜூலை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் யாழ். கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தொல்பொருள் கழகத்தின் முதல் நடவடிக்கையாக இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது.

யாழ் நகரில் காலத்துக்குக் காலம் மறைந்தும் புதிய புதிய அம்சங்களை எடுத்துக் காட்டும் வகையில் தொல்பொருள்களை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டு ஏராளமான பொருள்கள் பெறப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் குறிப்பாக அண்மைக்காலத்தில் உடுவில் தொகுதியிலுள்ள கந்தரோடையில் நடத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள். இந்துசமய மூர்த்தங்கள் மட்டுமல்லாது மற சமய மூர்த்தங்கள் கூடத் தோண்டி எடுக்கப்பட்டன.

இப்புதைபொருள் ஆராய்ச்சிகளின் மூலம் முன்னைய காலத்திய நடைமுறைகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் கல்வெட்டுகள், சிற்பங்கள் ஆகியனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டுதான் மேற்படி கண்காட்சி அமைகின்றது

கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்கள் உட்பட பரவலாக ஆராய்ச்சி செய்ததன் மூலம் கிடைத்த பல பொருட்களும் இக்கண்காட்சியில் இடம்பெறவிருக்கின்றது.

இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க திரு. ஆ. சிவனேசச்செல்வன் திரு. ஆ. தேவராஜன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

'குட்டி' கச்சேரிகள்

காலி, வியாழன்

'பழைய கச்சேரி முறையை மாற்றியமைக்கும் பட்சத்தில் முதலாவதாக தோம்பே, பத்தேகம ஆகிய இரு தொகுதிகளிலும் மாதிரி 'குட்டி' கச்சேரிகள் அமைக்கப்படவுள்ளன

பத்தேகம தொகுதியில் கிராம வங்கி ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே பொதுநிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சின் உதவியமைச்சர் திரு. டபிள்யு. நீல். டி. அல்விஸ் கூறியதாவது:-

"ஐக்கிய முன்னணி அரசு மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் கச்சேரி முறையை மாற்றியமைப்பதுமொன்றாகும். மார்ச் முதலாம் திகதியிலிருந்து கச்சேரி முறையை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மார்ச் முதலாம் திகதி தோம்பே பத்தேகம ஆகிய இரு தொகுதிகளிலும் மாதிரி கச்சேரிகள் அமைக்கப்படும். இதையடுத்த [illegible] மாதத்தில் நாட்டின் ஏனைய தொகுதிகளில் சிறிய கச்சேரிகள் திறக்கப்படும்

'ஞானம்தரும் சிவதீட்சை'

யாழ்ப்பாணம், வெள்ளி

"உலகியல் பாசத்தினை நீக்கி ஞானத்தைத் தருவது சிவதீட்சையாகும். நமது நல்வாழ்வு சமய அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

இவ்வாறு சமீபத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சமயதீட்சையின் போது உரையாற்றிய திரு ஆ. இ. சின்னத்தம்பி கூறினார்.

கல்லூரி மாணவ மாணவிகள் உட்பட சுமார் 183 க்கு மேற்பட்டோர் அன்றைய தினம் சிவதீட்சை பெற்றனர்.

Mosquitoes..?

BAYGON
BAYER
wipes out pests!

பேகோன்

ஹெகெம்
லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு.

‘தமிழின் எழுச்சியின் சின்னம் அண்ணா’

—அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"அண்ணா தமிழின எழுச்சியின் சின்னம். வடநாட்டார் தென்னாட்டாரை அடக்கி ஆள்வதை விரும்பாத அண்ணா தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற வழியைத் தேடி அதற்கு இரு மார்க்கங்களைக் கண்டார். ஒன்று இணைப்பாட்சி மற்றது தனியாட்சி."

கடந்த வியாழக்கிழமையன்று சிதம்பராக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்றத்தினர் கொண்டாடிய அண்ணா நினைவுதினத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அண்ணா உலகத் தமிழர்களின் தலைவனாக விளங்கினார் தமிழன் எங்கு நசுக்கப்பட்டாலும் அவர்களுக்காக இரங்குபவர் அண்ணா. சாதியின் பெயரால் தமிழ் இனம் சின்னாபின்னப்பட்டிருப்பதைக் கண்ட அவர் தொடர்ந்தும் இந்நிலை நீடித்தால் தமிழினம் முன்னேற முடியாதெனக் கண்டு சாதி முறையை ஒழிக்கப் பாடுபட்டு உழைத்தார். கலப்புத் திருமணங்கள் சீர்திருத்தத் திருமணங்கள் ஆகியவற்றை வரவேற்றார்.

தமிழ்நாடு பெற்றவர் அண்ணா 1967ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சரானதும் சென்னைப் பட்டினத்தைத் தமிழ்நாடு என மத்திய அரசைக் கொண்டு மாற்றுவித்தவர் காலாகாலமாகக் காங்கிரஸார் முயன்றும் செய்ய முடியாத இதைச் செய்த பெருமை அண்ணாவுக்கே உரியது" ......

யோகாசனத் தவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணி முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன யோகாசன ஆசிரியர் ஸ்ரீ சிதானந்தா யோகி "யோகாசனத்தவம்" என்னும் பொருள் பற்றிப் பேசி ஆசனங்களைத் தாமே செய்துகாட்டுவர். இரவு 7 மணிக்கு அம்மன் திருவிழா நிறைவேறும்.

மேலும் இரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பார்கள். கப்பலில் பணியாற்றும் மற்றவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று கூறினார்.

இவ்வாறு அமைச்சர் இந்தக் கப்பலைப்பற்றிக் கூறினார்.

நோர்வே கப்பல்

நோர்வேயில் வாங்கப்பட்ட கப்பலுக்கு புதிய பெயர் வழங்கப்படவில்லை 'சரமிஸ்' என்று அங்கு அழைக்கப்படும் இக் கப்பல் ஏப்ரலில் இலங்கை வந்து சேரும். 6 லட்சத்து 50 ஆயிரம் பவுணுக்கு வாங்கப்பட்டிருக்கும் இந்தக் கப்பலுக்கான தொகை ஜெர்மன் வங்கியொன்றிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது. 5 வருடத் தவணையில் இந்தத் தொகை வழங்கப்படும் என்றார் திரு. கலுகல்ல.

சீன உதவியுடன் மேலும் கப்பல்கள்

மேலும் இரு கப்பல்களை வாங்க சீனா உதவிசெய்ய விரும்புவதாகவும் அமைச்சர் கூறினார். இந்த உதவி சம்பந்தமாக நேரடியாகப் பேசுவதற்கு சீனாவிலிருந்து தூதுக்குழு வொன்று இம்மாத இறுதியில் இங்கு வரவிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடத்தில் கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு 80 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(நா)

போதிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சில வாரங்களுக்கு முன் பொறளை, புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் ஒரு கொத்து அரிசி ஒருரூபா 90 சதத்திலிருந்து 2 ரூபா 20 சதம் வரை தனியார் வர்த்தகர்கள் விற்பனை செய்தனராம். தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு அரிசி விநியோகிக்கு உரிமை உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமே இருக்கும் ஆனாலும் அரிசி விலைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் படவில்லை.

தனிப்பட்ட சிறு வர்த்தகர்கள் கப்பல் அரிசியைப் பெறுவதற்கு எதுவித இடையூறும் ஏற்படாதபடி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

சிவராத்திரி..

6-ம் பக்கத் தொடர்ச்சி

பைத்தியகாரத்தனம் எனச் சில இளைஞர்கள் கருதுகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சியறிவில்லாதவர்களாய் செம்மறியாட்டுக் கூட்டம் போல் ஓடுவர்களும் வேஷத்தை மற்றவர் கூறுவதேயாகும். விரதம் அல்லது நோன்பு அனுஷ்டித்தல் பிறமதத்தவர்களிடமும் இருந்து வருகின்றது. இதனால்தான் ஒளவைப் பிராட்டியும் "காப்பது விரதம்" என எல்லா சமயத்தவர்களுக்கும் பொதுவாக கூறினார். ஆத்திசூடியில் அச்சாணியாக விளங்கும் காப்பது விரதம் என்னும் இச்சிறு வாக்கியத்திற்கு விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விஷேசமாக வழிபடுதலாகும் என திருப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இரண்டாம் சைவவினாவிடையில் கூறியுள்ளார்.

விரதங்கள்

எனவே நம் நாவலர் தந்த இரண்டாம் சைவவினா விடை கூறும் சோமவார விரதம், திருவாதிரை விரதம், கேதார விரதம், உமாமகேசுர விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், பிரதோஷம் என்னும் ஒன்பதும் சிவ விரதங்களாகும் சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம் நவராத்திரி விரதம் என்னும் மூன்றும் தேவி விரதம் எனவும், சுக்கிரவார விரதம், விநாயகசதுர்த்தி விரதம், விநாயகசஷ்டி விரதம் என்னும் மூன்றும் விநாயக விரதம் எனவும், சுக்கிரவார விரதம், கார்த்திகை மாத விரதம், கந்தசஷ்டி விரதம் என்னும் மூன்றும் சுப்பிரமணியர் விரதம் எனவும், மங்கலவார விரதம், ஐப்பசிப்பரணி விரதம், சித்திரைப்பரணி விரதம் என்னும் மூன்றும் வைரவ விரதம் எனவும், செவ்வாய்க்கிழமை விரதம் வீரபத்திர விரதம் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே இவை அனைத்திலும் மேன்மை பொருந்திய "சிவராத்திரி" விரதத்தை அனுஷ்டித்து நாமனைவரும் நற்பயன் அடைவோமாக.

மகாசிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் (கீரிமலை சிவன்கோவிலில்) மகா சிவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. இத்தலம் சரித்திரப் பிரசித்தி பெற்றதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கமையப்பெற்றசிறந்த ஆலயமாகும்.

கடந்த திங்கட்கிழமை (31 1 72) தொடங்கி துவஜாரோகண விழா ஆரம்பமாகித் தொடர்ந்து அலங்காரத் திருவிழா நடைபெற்றுவருகிறது. மகா சிவராத்திரி தினத்தன்று இரதோற்சவம் நடைபெறுகிறது திங்கட்கிழமை கண்டகிதீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அன்று நான்கு ஜாமப் பூஜை நடைபெறும். நடுச்சாமத்தில் நடைபெறும் லிங்கோற்பவ பூசையும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் கர்ப்பூரத் திருவிழாவும் கண்கொள்ளாக்காட்சியாக அமையும்.

இவ்வாலயத்தின் சிறப்புக்களை "நகுலகிரிப்புராணம்" (பிரம்மஸ்ரீ கா. அப்பாசாமி ஐயர்) "நகுலேச்சரவிநோத வசித்திர கவிப்பூக்கொத்து" (புலவர்மணி க. மயில்வாகனப் பிள்ளை) "நகுலேஸ்வரர் ஊஞ்சல்" "சிவன் கோவில் சிறப்பு" (சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர்) "நகுலமலைக் குறவஞ்சி", "நகுலகிரி அனுபந்தம்" ஆகிய நூல்களிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் பதின்மூன்றாம் திகதி கந்தரோடை வந்தாக்கைகம்பதி விஸ்வநாத சுவாமி கோவிலில் மகா சிவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. அன்று கதாகாலக்ஷேபங்கள் பக்தி விரிவுரைகள் பக்திப் பாடல்கள் நான்கு யாமப் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன, இவ்விழாவில் சிவாலயங்களின் புனருத்தாரணம் பற்றிய ஆய்வுகள் நடைபெறவும் உள்ளது.

0 0 0

மாதகல், வியாழன்

இம்மாதம் 13-ம் திகதி மாதகல் அரசடி விநாயகராலயத்தில் சிவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. அன்று நான்கு யாமப் பூசைகளும், விசேட ஆராதனைகளும் நடைபெறவிருக்கின்றன

அன்றையதினம் வழக்கறிஞர் திரு. சிவப்பிரகாசம், பண்டிதர் திரு. வே. விருத்தாசலம், பண்டிதர் இரத்தினம், சைவ இளவல் திரு. சேனதிராசா "ஈழநாடு" பத்திரிகை ஆசிரியர் பிரம்மஸ்ரீ. கே. பி. ஹரன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும், திரு சபா. சதாசிவத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சிகளை மாதகல் இந்து வாலிபர் சங்கமும் சைவ இளைஞர் மன்றமும் ஒழுங்கு செய்துள்ளன.

0 0 0

ஊர்காவற்றுறை, வியா

நாரந்தனை - சரவணை ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இம்மாதம் 13 ம் திகதி மகாசிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது

சரவணை - தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலும் அன்றுதினம் [இம்மாதம் 13ம் திகதி] சிவராத்திரி விழா கொண்டாடப்படவிருக்கிறது.

மீசாலை, வியாழன்

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் சுற்றுப்புற வேலிகளைச் சீரமைத்தும் வேலைகளை வித்தியாலய மாணவர்கள் சிரமதானம் மூலம் செய்துள்ளனர்.

உதவிக் கல்விமாஅதிபர் கண்டித்தார்!

கோட்டை, புதன்

கொழும்பு தெற்கிலுள்ள பெரிய கல்லூரியொன்றின் அதிபரும் ஆசிரியர்களும் உதவி கல்வி மா அதிபதி டாக்டர் ரஞ்சித் ருபெருவால் அழைத்து வரப்பட்டு கண்டிக்கப்பட்டார்.

கொழும்பு பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளின் ஒழுங்கு முறை கவலையும் வியப்புக்குரியதாகவும் உள்ளன என்று டாக்டர் ரஞ்சித் பின்னர் கூறினார். கொழும்புதெற்கிலுள்ள ஓர் பிரபலபாடசாலைக்கு இவரும் 25 உயர் அதிகாரிகளும் சென்று அங்குநிலவிய நிலையை நேரில் கண்டு அவர்களைக் கண்டித்தனர்.

அவர் நடத்திய விசாரணையிலிருந்து அக் கல்லூரியின் 49 ஆசிரியர்களில் 22 பேர் சமூகமளிக்கவில்லை யெனத் தெரியவந்தது இவர்களில் 12பேர் லீவு எடுத்திருந்ததுடன் 10பேர் பாடசாலைக்குத் தாமதமாகவும் வந்திருந்தனர். ஆசிரியைகள் தாமதமாக வருவதினால் பெரும்பாலும் முதலாவது பாடம் நடைபெறுவதேயில்லையெனவும் இதனால் தாமும் பிந்திவருவதாகவும் இப்பாடசாலை மாணவர் தெரிவித்தனர்.

9ம், 0ம் வகுப்பு ஆசிரியை லீவில் இருந்திருப்பதில் இவ்வகுப்பு மாணவர்க்கு இதுவரை ஆங்கில பாடம் படிப்பிக்கப்படவில்லையாம் உயர்தர வகுப்புக்கு பாடம் ஆரம்பம் செய்யாத ஆசிரியர் மறுநாள் அப்பாடத்தை நடாத்துவதெனவும் கூறினார். வேறு ஒருபாடசாலை ஆசிரியர் 80 நாள் சம்பளமற்ற லீவு எடுத்ததாகவும் தாமதமாக வந்த பிறிதொரு பாடசாலை ஆசிரியர்கள் தாம் சென்றவாகனங்களைக் கண்டதும் திரும்பிச்சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்துத் தட்டுப்பாடு

மாவிட்டபுரம், வியா

தெல்லிப்பழையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள் கஷ்டமடைகின்றனர் என்று புகார் கூறப்படுகின்றது.

காங்கேசன்துறையில் இயங்கிவந்த இவ்வைத்தியசாலை தெல்லிப்பழையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்துக்கு சில மாதங்களுக்குமுன் மாற்றப்பட்டது

புதிய ஆஸ்பத்திரி திறக்கப்பட்ட நாள் முதல் இங்கு மருந்துத் தட்டுப்பாடு தலைதூக்கியுள்ளதாம்.

தளபாடங்கள் இல்லை

கல்வியங்காடு, வியா.

திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் தளபாட வசதியின்மையால் மாணவர்கள் நிலத்திலேயே இருந்து கல்விகற்கின்றனர். இக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப் பாடசாலை ஆசிரியர் சங்கம் நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி. அருணம் பலத்தைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தளபாடங்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எம். பி. மேற்கொண்டுள்ளார்,

---

யாழ்ப்பாணம்

வை. எம். சி ஏ. விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. நடாத்தும் வருடாந்த 'உள்ளக விளையாட்டு விழா' இம்மாதம் 14-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை நடைபெறும்.

இந்த விளையாட்டு விழாவில், கரம், டேபிள்டெனிஸ், பட்மிண்டன், செஸ் ஆகிய போட்டிகளுடன் "யாழ்ப்பாண ஆணழகன்" போட்டியும், 'வை. எம். சி. ஏ. ஆணழகன்' போட்டியும் நடைபெறும்.

[தேநி]

மக்கள் குழு செயலாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் 19-ம் வட்டார மக்கள் குழுவின் செயலாளராக ஜனாப் எம். எம். றஹீம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சீட்டிழுப்பு

கொழும்பு, வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் 882ம் இலக்கச் சீட்டிழுப்பு நாளை மாலை கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசிய லொத்தர் சபை அலுவலகத்தில் இடம்பெறும். பரிசு பெற்ற டிக்கற்றுகள் பணம் விநியோகத்திற்காக இக்காரியாலயத்தில் 14ம் திகதியிலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு அலுவலக நேரத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

தரம் அறிந்த அறிஞர்கள்
கோவில்களிலும் விசேஷ வைபவங்களிலும்
விரும்பிப் பாவிக்கிறார்கள்
யந்திர மூலம் அரைத்தெடுத்த
சூரியன்' வியாபாரசின்னமுடைய
சந்தனம்
தயாரிப்பாளர்கள்:-
நாஷனல் பெர்பியூமறி வேக்ஸ்
கிடைக்குமிடம்
சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.

மணிவாக்கு

நமது கடமைகளைச் சரிவரச் செய்தால்தான், நாம் எல்லா உரிமைகளையும் பெற்று அனுபவிக்கவும் தகுதியாவோம். உலகப் பிரஜைகளுக்கான கடமையை நாம் செய்யும்போதே உயிர் வாழ்வதற்கான உரிமையையும் நாம் பெறத் தகுதி பெறுகிறோம். — மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் தை மாதம்
28-ந் திகதி (11-2-72)

பதினான்கு

'ஈழநாடு' பத்திரிகைக்கு இன்றுடன் பதின்மூன்று நிறைந்து பதினான்காவது ஆண்டு பிறக்கின்றது. பல சோதனைகளுக்குத் தப்பி சென்ற பல ஆண்டுகளாக ஒரு நாளும் தவறாமல் இப்பத்திரிகை தனது நெறி பிசகாமல் தன் தேசிய கடமையைச் செய்துவர முடிந்துள்ளதென்றால் அதற்குக் காரணம் தெய்வ அருளும் அன்பர்களின் ஆதரவுமே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணத்திலே ஒரு தினசரிப் பத்திரிகை நடத்துவதென்பது சுலபமன்று. கொழும்பு போன்ற நகரில் நடக்கும் பத்திரிகைகளே பல சிக்கல்களைக் குறைத்தும் விலையைக் கூட்டியும் ஒருவிதமாக இன்றைய நெருக்கடியைச் சமாளித்து வருகின்றன. பலவித வசதிகளும் உள்ள அப்பத்திரிகைகளின் நிலையே அப்படியெனின் யாழ்ப்பாணத்திலே அதிக கடினமான சூழ்நிலையில் 'ஈழநாடு' தொடர்ந்து நடத்தி வருவது எவ்வளவு சிரமமென்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். காகிதவிலை மிகவும் உயர்ந்துள்ளது. மற்றச் செலவுகளும் ஏராளமாக அதிகரித்து வருகின்றன. திகைக்கச் செய்யக்கூடிய இந்நிலையிலும் பத்திரிகையை நடத்துவதற்கான ஊக்கம் அளிப்பது இது முக்கியமானதோர் சமூக. தேசியப் பணியாக இருப்பதுதான்.

நமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் இது மிக நெருக்கடியான காலம். ஆபத்துக்கால பிரகடனம் செய்யப்பட்டு அதேசமயம் நாட்டின் எதிர்கால அரசியல் தலையெழுத்தும் நிர்ணயிக்கப்படுகின்றது. இப்போது செய்யப்படும் ஒரு தவறு நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும். தமிழ் சமூகத்தின் நல உரிமைகள் தேசிய நல உரிமைகளுக்கு முரண்பட்டதாகா. ஆனால் ஒரு சமூகத்தின் நலன் பாதிக்கப்படுமாயின் அது நாட்டின் ஒற்றுமையையும் நலனையுமே பாதிக்கும். ஆகவே கடும் தணிக்கைகள் அமுலில் இருக்கும் இக்காலத்தில் தமிழ்ச்சமூகத்தின் உரிமைகளையும் அதேசமயம் நாட்டின் க்ஷேமான நன்மைகளையும் பாதுகாக்க வேண்டிய முக்கியமான பணியைச் செய்ய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு 'ஈழநாட்டுக்கு' உண்டு. புனிதமான இத்தேசியப் பணியைச் செய்யும் பாக்கியம் நீடித்துக் கிடைக்குமென்ற நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் 'ஈழநாடு' பணியுடன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகின்றது.

பங்களாதேச அரசாங்கம்

பங்களாதேசத்தை இலங்கை அரசாங்கம் வெகுசீக்கிரத்தில் அங்கீகரிக்குமென்று தெரிவிக்கும் ஒரு செய்தி வரவேற்கத்தக்கதாகும். இரு காரணங்களால் இவ்விஷயத்தில் இலங்கை அரசாங்கம் தயங்கி வந்தது. ஒன்று பாகிஸ்தானுக்கும் பங்களாதேசத்துக்கும் ஏதாவது உறவு ஏற்படுமோ என்பது. அதைப்பற்றி நினைப்பதும் வைத்தியக்காரத்தனமென்று பங்களாதேச பிரதமர் முஜிபுர் ரஹ்மான் தெளிவாகக் கூறிவிட்டதால் அதற்கு இனி இடமில்லை. மற்றொன்று பங்களாதேசத்திலுள்ள இந்தியத் துருப்புகளை மார்ச் மாதம் 25-ம் திகதிக்கு விலக்கிக்கொள்ள இருதேசப் பிரதமர்களும் ஒப்புக்கொண்டதாக அறிவித்துள்ளதால் இப்புதிய நாடு சுதந்திரத்துடன் இயங்குமென்பது ஏற்படுகின்றது.

மேலும் பிரிட்டன் உள்ளிட்டு பல நாடுகளும் பங்காளின் அண்டைநாடுகளும் அதை அங்கீகரித்துள்ளதாலும் அங்கு நிலையான அரசாங்கம் ஏற்பட்டு இயங்கிவருவதாலும் இலங்கையும் இனி இதுபற்றித் தயங்கத் தேவையில்லை. புதிய தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று பாகிஸ்தானிலேயே தேசிய அவாமிக்கட்சி கேட்கின்றது. சீக்கிரத்தில் இலங்கை அங்கீகாரமளிப்பது இலங்கைமீதுள்ள தப்பெண்ணம் நீங்கவும் தெற்கு ஆசியப்பகுதியில் புதிய ஒற்றுமையும் சுபீட்சமும் ஏற்படவும் வழிபிறக்கும்.

ஆராய்ச்சி நிறுவனம்

[illegible], வியாழன்

தேசிய பொறியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையமொன்றை அரசாங்கம் விரைவில் அமைக்கவிருக்கிறது.

விவசாயமூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே மேற்படி நிறுவனம் நிறுவப்படவிருக்கிறது. உள்நாட்டு மூலப்பொருள்களைக் கூடிய அளவு பயன்படுத்தி நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியைப் பெருக்க இந்நிலையம் உதவும் எனக் கைத்தொழில் அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 11-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்

மலையகக் காந்தியின் நினைவு

ஐயாறன் எழுதுவது

மலையகக் காந்தியும், "ஈழநாடு" பத்திரிகையின் உண்மையான அன்பர்களில் ஒருவருமான கே. இராசலிங்கம் அவர்கள் மறைந்து இன்றுடன் சரியாக ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன.

ஐம்பத்தி நான்கு ஆண்டுகள் வாழ்ந்த அந்த அன்பரின் எளிமையும், தியாகமும் சிறப்பாக மலைநாட்டுத் தமிழருக்குச் செய்துள்ள சேவைகளும் கொஞ்சமன்று.

இருபத்திரண்டு வயதிலே புசல்லாவையில் ஒரு பள்ளிக்கூடத்தை மலைநாட்டுப் பிள்ளைகளின் கல்விக்காக ஸ்தாபித்தார். 1931-ம் வருஷத்தில் கண்டியிலே இந்திய அரசாங்க ஏஜெண்டாக இருந்த திரு கே. பி. எஸ். மேனன் தம்பதிகள் அப்பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்தனர். திருமதி சரஸ்வதி மேனனின் பெயரையே அப்பள்ளிக்கூடத்துக்கு அவர் சூட்டச் செய்தார்.

சரஸ்வதி என்று கலைமகளைக் குறிக்கும் பெயரே வைத்திருப்பதாக ஏன் பலரும் நினைக்கலாம். திருமதி மேனனின் பெயர் அது என்பது எத்தனைபேருக்குத் தெரியும்? அத்தலைவர் மறைந்து ஒன்பது வருடங்களாகியும் அவரது நினைவாக, மலைநாட்டிலே இதுவரை ஒன்றும் செய்யாதது பெரிய குறை. மக்கள் பணிக்காக, தம் வாழ்க்கை முழுதும் அர்ப்பணித்து பிரம்மச்சாரியாக வாழ்ந்த அவரை மறப்பது ஒரு பாவமாகும்.

இளமை முதல் அவர் மலைநாட்டிலே இருந்த பல சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு பணி செய்தார். 1939-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து நேருஜி இங்கு வந்து, பிரிந்துகிடந்த மலைநாட்டு இந்திய சமூகத்தலைவரை, இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஸ்தாபனத்தின்கீழ் ஒன்று திரட்டியபோது, இராஜலிங்கம் அதன் காரியதரிசியாகி அரும் தொண்டாற்றினார். ஒருமுறை அதன் தலைவராக இருந்தார். நாடு விடுதலை அடைந்ததும், அந்த ஸ்தாபனம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று புதுப் பெயர் பெற்றது. நாவலப்பிட்டி தொகுதியின் பிரதிநிதியாகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். மலைநாட்டுத் தமிழரின் சமூகத்தின் பல குறைகளைப்பற்றியும் அவர் நீண்டதோர் மகஜர் தயாரித்து ஜெனிவாவில் சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் சமர்ப்பித்து, அவர்களுக்காக வாதாடினார்.

"ஈழநாடு" வாரப்பதிப்பாக முதலில் வெளியான போது அதை மலையகத்தில் பரப்பவும், இப்பத்திரிகை வளர்ச்சி பெறவும் அவர் ஊக்கத்துடன் செய்துள்ள உதவிகளை "ஈழநாடு" என்றுமே மறக்க முடியாது. 'ஈழநாடு' பிறந்த நாளன்று அவரது நினைவுநாளும் வருகிறது! இந்த நல்ல நாளில் அவரை நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் என் நெஞ்சம் நினைக்கின்றது.

அவர் ஸ்தாபித்த பள்ளிக்கூடத்தை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்துகிறதென்றாலும், அதன் பெயரை 'ராஜலிங்கம் வித்தியாலயம்'' என்று மாற்றலாமென்று கொழும்பிலுள்ள இராஜலிங்கம் ஞாபகார்த்தக் குழுவினர் உத்தேசித்துள்ளதாக அறிந்தேன். இது பல விதங்களிலும் வரவேற்கத்தக்கதுடன், அவரது பெயரால் தோட்டத்தொழிலாளரின் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் முதலியவைகளை அளித்து ஆதரிப்பது அவரது ஆத்மாவுக்கு மிக மகிழ்ச்சியளிக்கும்.

0 0 0

ஸ்ரீ கிருஷ்ணர் ஏன் நீலவர்ணத்தவராக இருக்கிறார்? என்று சுவாமி விவேகானந்தர் சென்னைக்கு ஒரு சமயம் வந்தபோது, அவரைப் பார்க்கக்கூடிய இளம் மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். அங்கிருந்த ஒரு கிருஷ்ணரின் படத்தைப் பார்த்ததும் மாணவர்களைப் பரீட்சிக்க இப்படிக் கேட்டார்.

மாணவரில் பலரும் திகைத்தனர். சிலர் முழித்தனர். பேசாமல் இருந்தனர். அதில் ஒரு சிறுவன், "நீலமே எல்லையற்றதன்மையைக் குறிப்பதாக" என்றான். எப்படி? என்று சுவாமி திருப்பிக் கேட்டதும், "கடல் எல்லையற்றது அது நீல நிறம், ஆகாயமும் எல்லையற்றது அதுவும் நீலம்" என்று அச்சிறுவன் கூறியதும் சுவாமி அவனைத் தட்டிக்கொடுத்து "பலே" என்று பாராட்டினாராம்.

அச்சிறுவன் யார் தெரியுமா? இப்போது 93 வயதான ராஜாஜிதான். வளரும் பயிர் முளையிலே!

சிவராத்திரி விரதம் தரும் தலையாய பயன்

விரதங்களில் எல்லாம் சிறந்தது சிவராத்திரி, இது மாசிமாதத்து அபரபக்க சதுர்த்தசியில் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிப்பது.

விரதங்களுள் சிவராத்திரி அதிமுதன்மையானது. சிவராத்திரிக்கு இணையாக வேறொரு விரதத்தை மதிப்பது பதியாகிய சிவபெருமானுக்கு இணையாகப் பிரமாதி தேவர்களை மதிப்பது போலாகும்.

யமபயம் இருக்காது

இவ் விரதத்தின் மகிமை பற்றி ஸ்ரீ பரமேஸ்வரனே பார்வதி தேவிக்குக் கூறுகிறார்.

மகா சிவராத்திரி விரதத்தைப் பற்றிப் பேசுகிறவர்களுக்கு யமபயமே இல்லை, பல யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் இவ் விரதத்தை அனுஷ்டிப்பது மிகவும் புண்ணியமாகும். சிவராத்திரி விரதத்தால் கிடைக்கும் நற்பயன் கங்கையில் நீராடுவதால் கிடைக்காது. தெரிந்தோ தெரியாமலோ இவ் விரதத்தை அனுஷ்டிப்பவன் சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்டு விடுவான். இவ்வுலகில் எல்லாச் சுகங்களையும் அளித்து பரலோகத்துக்கும் நல்ல சுகங்களை அளிக்கும், அழகு வாய்ந்த முகமுள்ள பார்பதியே இது சத்தியம்.

வேடனுக்கு நற்கதி

காட்டில் ஒரு வேடன் இரவில் மிருகங்களைப் பிடிப்பதற்காக வில்வமரத்தில் இருந்துகொண்டு தூக்கம் வராமலிருக்க வில்வம் தழைகளைப் பறித்து கீழே போட்டுக்கொண்டிருந்தான். அந்த மரத்தடியில் புதைந்திருந்த சிவலிங்கத்தின் முடியில் அவை விழுந்தன. அதனால் அவன் நற்கதியடைந்துவிட்டான். அந்த வேடன் வேதத்தையோ யோகத்தையோ அறியாதவன். இவனே நற்கதியை அடைந்தான் என்றால் வேதத்தின் பெருமையைத் தெரிந்து செய்கின்றவர் சிறந்த நற்பயனை அடைவார்கள் என்பதில் ஐயமென்ன?

இச் சிவராத்திரி தினத்தில் [illegible] யாவரும் உபவாசமிருந்து இரவில் ஸ்நானம் செய்து தமது வீட்டிலோ கோவிலிலோ ஸ்ரீ பரமசிவனுக்கு அபிஷேகம் அர்ச்சனை, நமஸ்காரம் ஸ்தோத்திரம் முதலியவற்றைப் பக்தியுடன் செய்வது முக்கியம். தம்வீட்டில் பூஜிப்பவர்களும் சிவராத்திரி அன்று ஆலயத்துக்குச் சென்று சிவனைத் தரிசிப்பது வழக்கம், இந்தப் பரிசுத்தமான நாளில் ஒருமுறை பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபித்தால் கோடிமுறை ஜெபித்த புண்ணியமாகும்.

'காப்பது விரதம்'

இம்மாதிரி மகத்தான பலனையளிக்கும் சிவராத்திரி விரதத்தை யாவரும் அனுஷ்டிக்க வேண்டும். சிவநாமத்தையாவது நிரம்ப ஜெபிக்க வேண்டும், விரதம் அனுஷ்டிப்பது இக்காலத்தில் சுத்த

5-ம் பக்கம் பார்க்க

த. பரராசசிங்கம் —

மரண அறிவித்தல்

இராஜரத்தினம் பாக்கியவதி

செல்லப்பா இராஜரத்தினம் (இளைப்பாறிய உதவி சிறுப்பர், இம்பீரியல் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி, இராஜலிங்கம் (யாழ். உலோகத்தொழிற்சாலை), ஜெயவதி, விக்னராஜா (ஹரிஸன் லிஸ்டர் என்ஜினியரிங் லிமிட்.), திலகவதி ஆகியோரின் தாயாரும், ஜெகநாதன் (மெர்க்கன்டைல் வங்கி, யாழ்ப்பாணம்), சத்தியபாமா, சண்முகநாதன் (ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜெஸ் லிமிட்.), கலாதேவி, பதி. குமாரசாமி (ப்ரம்லி எஸ்டேட் சந்தப்பொல) ஆகியோரின் மாமியாருமாகிய பாக்கியவதி காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் ஈமச்சடங்குகளுக்காக நல்லூர் கோவில் வீதி, 97-ம் இலக்க இல்லத்திலிருந்து 12-ந் திகதி சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

4024

மரண அறிவித்தல்

தி. சரஸ்வதி அம்மா

சுதுமலை அம்மன்கோவில் அர்ச்சகர் தியாகராச ஐயருடைய மனைவி சரஸ்வதி அம்மா இன்று காலை (10-2-72) காலமாகிவிட்டார். தகவல்: பொன்னுச்சாமிக் குருக்கள் தியாகராச ஐயர் (வைத்தியர்)

4018